# துவக்கம்

## • புத்தாக்க மையத்தில் மாணவர் சேர்க்கை...

## • ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்க திட்டம்

**புதுச்சேரி, மார்ச் 2–**

**மாணவர்கள் மத்தியில் அறிவியல் ஆராய்ச்சி செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் துவங்கப்பட்டுள்ள புத்தாக்க மையத்தில் மாணவர் சேர்க்கை துவங்கி உள்ளது.**

லாஸ்பேட்டையில் அமைந்துள்ள அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தில், மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் ரூ.1.50 கோடி செலவில் புத்தாக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய கலாசார அமைச்சகத்தின் தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றமும், புதுச்சேரி அரசின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையும் இணைந்து புத்தாக்க மையத்தை அமைத்துள்ளன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் அறிவியல் ஆர்வத்தை துாண்டும் நோக்கத்திலும், அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட உதவும் வகையிலும் இந்த மையம் துவங்கப்பட்டுள்ளது.

புத்தாக்க மையத்தில் மாணவர்களின் அறிவியல் ஆராய்ச்சிக்கு வழிகாட்டும் வகையில் கண்டுபிடிப்பு அரங்கம், அறிவியல் யோசனைகளுக்கான ஆய்வகம், உபகரணங்களை பிரித்து மீண்டும் உருவாக்குதல், உடைந்த பொருட்களில் இருந்து புதிய பொருட்களை உருவாக்குதல், ஐடியா பாக்ஸ், டிசைன் ஸ்டுடியோ போன்ற வசதிகள் உள்ளன.

இந்த மையத்தின் முதல் பேட்ஜ் மாணவர் சேர்க்கைக்கான நடவடிக்கை துவங்கி உள்ளது.

முதல்கட்டமாக, 250 பள்ளி மாணவர்கள், 50 கல்லூரி மாணவர்கள் என, 300 பேரை சேர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் ஓராண்டு காலத்திற்கு உறுப்பினர்களாக இருக்கலாம்.

புத்தாக்க மையத்தில் உறுப்பினராக சேர்வதற்கு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரையிலான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். அதுபோல, கல்லூரி மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பள்ளி மாணவர்களுக்கு கட்டணமாக ரூ.500, கல்லூரி மாணவர்களுக்கு கட்டணமாக ரூ.1000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் தகுதியான மாணவர்களுக்கு கட்டண சலுகை வழங்கப்படும்.

சேர்க்கை தொடர்பான அனைத்து விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவமும் https://dste.py.gov.in, https://py.gov.in ஆகிய புதுச்சேரி அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ, வரும் 17ம் தேதிக்குள், உறுப்பினர் செயலர், புதுச்சேரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, 3வது மாடி, வீட்டு வசதி வாரிய கட்டடம், அண்ணா நகர், புதுச்சேரி–5 என்ற முகவரியில் சமர்ப்பித்திட வேண்டும்.